Centre for External Degrees and Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka

26.10.2022

அன்புள்ள மாணவ, மாணவிகளுக்கு,

**வியாபார நிருவாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான மூன்றாம் வருட முதலாம் பருவ மாணவர் மீள்பதிவு – 2015/2016**

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தில் (CEDPL) வெளிவாரி மாணவராக பதிவு செய்து கொண்ட நீங்கள் தற்போது **மூன்றாம் வருட முதலாம் பருவ** கல்வி நடவடிக்கைகளுக்காக பதிவு செய்ய வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன். இப்பதிவிற்கு தகைமைபெற, ***நீங்கள் இரண்டாம் வருட இரண்டாம் பருவ பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் தோற்றியிருத்தல் வேண்டும்.***

**மீள்பதிவுக்கான ஆவணங்கள்**

- மூன்றாம் வருட முதலாம் பருவ மீள்பதிவுக் கட்டணம் ரூபா. **10,000.00** ஆகும்.
- இதனை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற Paying- In-Voucher (PIV) மூலம் (கணக்கு இல: **228-1001-6000-1692**) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்த முடியும். இப்பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழராதபடி ஒட்டுதல் வேண்டும் (மீள்பதிவுக்கான விண்ணப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்திற்கு மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் நேரடியாக சமூகமளித்து மீள்பதிவினை மேற்கொள்ளலாம். நேரடியாக சமூகமளித்து பதிவினை மேற்கொள்ள முடியாதவர்கள், பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பதிவுப் புத்தகத்தை அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

எனவே, 11.11.2022 அன்று அல்லது அதற்கு முன்னர் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்பாய் வேண்டிக் கொள்கின்றேன்.

முக்கிய குறிப்பு:

- எக்காரணத்திற்காகவும் பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்துடன், மீள்பதிவு செய்யாதவர்கள் குறித்த கருத்தரங்கு மற்றும் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- பூரணப்படுத்தப்படாத அல்லது பதிவு செய்வதற்கு தகைமைபெறாத மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பிரதிப்பதிவாளர்
வெளிவாரிப்பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்
பதிவாளருக்காக